மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: **திரு.T. கோகுல கிருஷ்ணன்** **B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் **ஜூலை** மாதம் **18**ம் நாள் **திங்கட்** கிழமை

**சுபகிருது** ஆண்டு **ஆடி** மாதம் **02**ம் நாள்

**CNR No. TNMD19000134-2018**

**I.A . No. 103/2022**

**in**

**O.S. No. 111/2018**

R.ஜெகநாதன் .... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. R. உலகநாதன்
2. உதவி மின்பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலகம், சோழவந்தான்.
3. வட்டாட்சியர், வாடிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகம், வாடிப்பட்டி.

..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு **15.03.2022**ம்தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M.வெங்கடேசன்** அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு.M. தியாகராஜன்** மற்றும் **திரு. M. சுரேஷ்** அவர்கள் ஆஜராகியும், 2,3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் **அரசு வழக்கறிஞர்** அவர்கள் ஆஜராகியும், கடந்த **12.07.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால், மனு அபிடவிட்டுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்ட வரைபடத்தினை அசல் வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்ய அனுமதி கோரி கட்டளை 7 விதி 14(1) உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார் என்றும், அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியத்திற்காக உள்ள நிலையில், கடந்த 03.03.2022ம் தேதியில் வாதி தரப்பில் நிரூபண வாக்கு மூலம் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் வாதி தரப்பு சான்றாவணமாக வாதி தரப்பினை நிரூபிக்கக்கூடிய ஆவணம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும், மேற்படி வரைபடத்தினை வழக்கினை தாக்கல் செய்யும்போதே வழக்குரையோடு தாக்கல் செய்வதற்கு முந்தைய வழக்கறிஞருக்கு அறிவுறுத்தியபோதும், முந்தைய வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படி ஆவணத்தை வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் போனது தற்போது தான் தெரியவந்ததால் மேற்படி வரைபடத்தினை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மனுதாரர்/வாதி தரப்பு வழக்கினை நிரூபணம் செய்வதற்கும் மேற்படி வரைபடம் அவசியமானது என்றும், இம்மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இருக்க முடியாது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதி தரப்பு எதிர் மனுஉரையின் சுருக்கம்:</u>

1ம்எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 1ம்பிரதிவாதி ஆவார் என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் வழக்கினை தாக்கல் செய்த பின்னிட்டு வழக்கிற்காகவே உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், வரைபடம் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படவேண்டுமென்றால், அது வருவாய்துறையின் மூலமாக அளவீடு செய்யப்பட்டு வருவாய்துறை அலுவலரால் சான்றளிக்கப்பட்ட ஆவணமாக இருக்க வேண்டும் என்றும், எனவே மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபட ஆவணமானது சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாத ஆவணம் என்றும், அசல் வழக்கில் மனுதாரர்/வாதியால் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யக்கோரி இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தினை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையுடன் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வரைபடம் வழக்கிற்கு தேவையில்லாத ஒன்று என்றும், மேற்படி வரைபடத்தை வழக்குரையோடு தாக்கல் செய்வதற்கு முந்தைய வழக்கறிஞருக்கு அறிவுறுத்தியபோதும் தாக்கல் செய்யாததால் தற்சமயம் தாக்கல் செய்வதாக கூறுவது பொய்யானது என்றும், இம்மனு அனுமதிக்கப்பட்டால் 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2,3 எதிர்மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவிற்கு எதிர் மனு உரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப் படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,

இறுதியாக,

இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

5) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகள் சமூகம் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

6) கட்டளை 7 விதி 14 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் வழக்கானது, மனுதாரர்/வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்திட வேண்டி நிலுவையில் இருந்து வருகிறது.

8) மேற்படி மனுதாரர்/வாதியால் கடந்த 03.03.2022 தேதியில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்கு மூலத்தில் மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்களாக 11 ஆவணங்களையும், நீதிமன்ற சான்றாவணங்களாக 2 ஆவணங்களையும் குறியீடு செய்திட வேண்டி மனுதாரர்/வாதியால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் இந்த மனுவில் ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி அனுமதி கோரிய தோராய மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் மனுதாரர்/வாதியால் தோராய மாதிரி வரைபடத்தை மனுதாரர்/வாதியால் சாட்சியம் அளிக்கக்கூடிய முதல்நிலை விசாரணையில் ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி இந்த மனுவில் அனுமதி கோரப்பட்டுள்ளது.

9) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுஉரையில் வழக்குரை தாக்கல் செய்யும் காலக்கட்டத்தில் தோராய மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்திடாமல் தற்போது, வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்படுவதாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையில் கண்டுள்ள ஆட்சேபணைகளை சமூக நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

10) இம்மனுவின் அசல் வழக்கில், மனுதாரர்/வாதி தரப்பில் வா.சா.1 முதல் நிலை சாட்சியம் அளிக்கப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்திட வேண்டிய நிலையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தோராய மாதிரி வரைபடத்தை ஆவணமாக ஏற்றுக்கொள்ள வேண்டி அனுமதி கோரப்பட்டுள்ளதை பொருத்து மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கின் தன்மைக்கருதியும்,

நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதித்திட சமூக நீதிமன்றத்தால் முடிவு காண்கிறது.

11) மனுதாரர்/வாதியால் குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களின் உண்மை தன்மையை மனுதாரர்/வாதியே நிரூபணம் செய்யக்கடமைப்பட்டவர் ஆவார்.

12) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு, குறியீடு செய்யக்கூடிய ஆவணங்களின் உண்மைத்தன்மையை பரிசோதனை செய்திட மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சியமளிக்கக்கூடிய முதல் நிலை சாட்சியத்தில் குறுக்கு விசாரணை மூலம் தெளிவுப்படுத்திக்கொள்ள 1ம்எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு வாய்ப்பு உள்ளதாக இந்த நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. ஆகவே, மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அசல் வழக்கின் தன்மை கருதி நிரூபணம் செய்யப்பட்டதாக சமூக நீதிமன்றத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு அசல் வழக்கினை காலதாமதம் செய்திடக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு இந்த மனுவானது அனுமதித்து உத்தரவு பகரப்படுகிறது.

இறுதியாக,

இந்த மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள்:** இல்லை.

(ஓம்.T.கோகுலகிருஷ்ணன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.